தேதி.22.10.2024

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**.31/2015 **திரு.கதிரேசன்** **வா.சா.1**

**வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வா.சா.ஆ.2-ல் சொத்துக்கள் சுயார்ஜித வகையிலும், பிதுரார்ஜிதவகையிலும் பாத்தியப்பட்டது என்று வா.சா.ஆ.2-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் 3-ம் பிரதிவாதிக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் அவருக்கு பாகம் இல்லை. ஏனிஹனெனில் அந்த சொத்து நஞ்சப்ப கவுண்டரும் அவரது அண்ணனும் சுயார்ஜிதமாக வாங்கிய சொத்து. அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் ஆவணங்கள் இருக்கிறது. நஞ்சப்ப கவுண்டருக்கு வா.சா.ஆ.3 காலத்தில் நினைவு குறைவாக இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சுய நினைவு இல்லாத காலத்தில் 2-வது பிரதிவாதி அந்த கிரைய ஒப்பந்தத்தை வாங்கி எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி அந்த காலகட்டத்தில் குடும்பத்தை கவனிக்காமல் தன்னிச்சையாக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால்தான் அவரது தந்தையை என்னிடம் அழைத்து வந்து எந்த தொகையும் நஞ்சப்ப கவுண்டர் பெற்றுக் கொள்ளாமல் கிரைய உடன்படிக்கை செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நஞ்சப்ப கவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு எந்த முன்னறிவிப்பும் அவரது வாரிசுகளுக்கு

நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் அந்த கிரைய உடன்படிக்கை சட்டப்படி செல்லத்தக்கதல்ல, மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. 1, ம் பிரதிவாதிக்கும் 3-ம் பிரதிவாதிக்கும் பங்கு இருப்பதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் 1, 3 பிரதிவாதிகளை இந்த வழக்கு கட்டுப்படுத்த கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து ரூ.30,00,000/-ம் மதிப்புடைய சொத்து என்று சொன்னால் சரிதான். இன்றைய மதிப்பு ரூ.30,00,000/-ம். நான் ரூ.22,50,000/-க்கு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3-ல் ரூ.2,50,000/- என்று சொன்னால் அது அரசு சொத்து வழிகாட்டி மதிப்பு. வா.சா.ஆ-3-ல் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நானும், 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து இந்த சொத்தை அவரது குடும்பத்தாரிடமிருந்து அபகரிக்கவேண்டுமென்று கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் நஞ்சப்ப கவுண்டர் காலமானவுடன் அவரது வாரிசுகளிடம் இது குறித்து முறையான அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சட்டப்படியான வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சி கையெழுத்து போட்டுள்ள கமலம் எனக்கு தெரிந்தவர். 2-வது சாட்சி சிவகுமார் இந்த சொத்தை பேசி முடித்தவர். இந்த சாட்சிகள் இருவரும் எனக்கு தெரிந்தவர்கள், வேண்டியவர்கள் என்று சொன்னால் சரியல்ல. எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்று சொன்னால் ஞாபகம் இல்லை.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.22.10.2024

வா.சா.ஆ.3-ஐ யார் தயார் செய்தார்கள் என்று சொன்னால் பத்திர எழுத்தர் பெயர் தெரியவில்லை. கூப்பிடும் பெயர் செல்வம். அவர் எனக்கு தெரிந்தவர் என்றால் நஞ்சப்பகவுண்டருக்கு வேண்டப்பட்டவர். நஞ்சப்பகவுண்டர் நகல் எடுப்பதாக இருந்தால் அங்கு தான் சென்று எடுப்பதாக சொன்னார். நஞ்சப்ப கவுண்டர் இருக்கும்போதே என்னுடைய தாயாருக்கு கண்ணம்மாளுக்கு பவர் கொடுத்துள்ளார். நான் ஏன் அவரிடம் கிரையம் எழுதி வாங்கவில்லை என்றால், இரண்டு ஆண்டு காலம் 2-ம் பிரதிவாதியின் திருமணத்திற்காக காத்திருக்குமாறு சொன்னார். பின்னிட்டு எதிர்பாராதவிதமாக நஞ்சப்பகவுண்டர் இறந்துவிட்டார். திருமண செலவுகள் குறித்து வா.சா.ஆ.3-ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், பவர் ஏஜெண்டிடமே பணத்தை கட்டி கிரையம் வாங்கியிருக்கலாம் என்றும், ஏன் வாங்கவில்லை என்றும் சொன்னால் இரண்டு ஆண்டு காலம் 2-ம் பிரதிவாதியின் திருமணத்திற்காக காத்திருக்குமாறு சொன்னார். பின்னிட்டு எதிர்பாராதவிதமாக நஞ்சப்பகவுண்டர் இறந்துவிட்டார். நான் அந்த சொத்தை அபகரிக்க வேண்டி 1, 3 பிரதிவாதிகளுக்கு தெரியாமல் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கடனாக கொடுத்ததால் தான் கிரையம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கடனாக கொடுத்த அக்ரிமெண்ட் தொகைக்கு வட்டி செலுத்தி வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் நஞ்சப்ப கவுண்டர் இறந்ததால் முழு தொகையையும் அபகரிக்க வேண்டீ இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் நீதிமன்றத்தில் தொகையை செலுத்தியுள்ளேன். எவ்வளவு தொகை செலுத்தியுள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் ரூ.25,000/- வைப்பீடு செய்துள்ளேன்.

**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.